இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 84 – ஒலி: 62 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – புரட்டாசி 26 – ஞாயிற்றுக்கிழமை 12 அக்டோபர் 2025 – கோவை ★★ 12 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 84 - Issue 62: Thiruvalluvar Year - 2056 - Purataasi 26 - Sunday 12 October 2025 - Kovai ★★ 12 Pages ₹ 5.00

## கண்ணாடி இழை கம்பி வடம் வழி இணைப்புடன் – நவீன இணைய தளச் சேவையை முதல்வர் துவக்கிவைத்தார்!

# முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை - 10 ஆயிரம் கிராமப் பஞ்சாயத்துகளில் ஒளிபரப்பு!

## தமிழ்நாடு முழுதும் கிராம சபைக் கூட்டங்கள் ! பொதுமக்கள் திரளாகப் பங்கேற்பு!


### இயக்கத்துக்காகவே இறுதிவரை வாழ்ந்த

## முரசொலி செல்வம் நினைவுகளை நெஞ்சில் சுமந்தபடி போற்றி வணங்குகிறேன்!

### வலைதளப் பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உருக்கம்!

பெங்களூரு, அக்.12-

முரசொலி செல்வம் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாளான நேற்று, பெங்களூருவில் உள்ள அவரது இல்லத்திற்கு, கழகத் தலைவர் - முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சென்று, அங்கு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த முரசொலி செல்வம் அவர்களின் அழகிய திருவுருவப் படத்திற்கு மலர் தூவி வணங்கினார்.



அதனையடுத்து வெளியிட்ட வலைதளப் பதிவில் கழகத் தலைவர் அவர்கள், "இயக்கத்துக்காகவே இறுதி வரை வாழ்ந்த முரசொலி செல்வம் அவர்களின் நினைவுகளை நெஞ்சில் சுமந்தபடி போற்றி வணங்குகிறேன்!" என்று உருக்கமுடன் குறிப்பிட்டார்.

கழகத் தலைவர் - முதல்வர் அவர்களின், அந்த வலைதளப் பதிவு வருமாறு:-

**"தலைவர் கலைஞரின் பிள்ளையாகவே வளர்ந்தார்!**

**முரசொலியில் எங்களுக்கெல்லாம் ஆசானாகத் திகழ்ந்தார்!**

**இயக்கத்துக்காகவே இறுதிவரை வாழ்ந்து மறைந்தார்!**

**அச்சமில்லை, ஆணவமில்லை, நல்லறிவினில் எம் திராவிடச் செல்வத்துக்கு இங்கு எவரும் நிகரில்லை என நான் உற்ற துணையாகக் கொண்ட முரசொலி செல்வம் அவர்களின் முதலாம் நினைவு நாள்!**

**அவரது நினைவுகளை நெஞ்சில் சுமந்தபடி போற்றி வணங்குகிறேன்..."**

இவ்வாறு முதல்வர் அவர்கள் சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

**சென்னை, அக்.12 -**

**தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்ட ஊராட்சி அமைப்புகளிலும் நேற்று கிராம சபைக் கூட்டம் நடைபெற்றது. முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நவீன இணைய தள சேவையை துவக்கி வைத்து உரையாற்றினார். 10 ஆயிரம் கிராமப் பஞ்சாயத்துகளில் முதல்வரின் உரை ஒளிபரப்பப்பட்டது.**

தமிழ்நாடு மாநிலத்தின் ஊரக உள்ளாட்சிகளில், மாநிலம் முழுவதும் உள்ள 12,480 ஊராட்சிகளில் கிராம சபைக் கூட்டம் நேற்று (11.10.2025 - சனிக்கிழமை) காலை 11.00 மணிக்கு நடைபெற்றது.

இக்கூட்டத்தின் சிறப்பு நிகழ்வாக, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலி (Video Conference) மூலம் மாநிலம் முழுவதும் உள்ள கிராம ஊராட்சிகளின் பொதுமக்களுக்குச் சிறப்புரை வழங்கினார். இந்நிகழ்ச்சி. தமிழகம் முழுவதும் TANFINET இணைப்பில் உள்ள 10,000 ஊராட்சிகளில் இணையத்தின் மூலம் நேரடி ஒளிபரப்பாக (Live telecast) நடைபெற்றது.

இந்நிகழ்வில், செங்கல்பட்டு மாவட்டம் - கோவளம் ஊராட்சி, தென்காசி மாவட்டம் - முள்ளிக்குளம் ஊராட்சி. கோயமுத்தூர் மாவட்டம் - வாரப்பட்டி ஊராட்சி, விழுப்புரம் மாவட்டம் கொண்டாங்கி ஊராட்சி, மற்றும் தஞ்சாவூர் மாவட்டம் திருமலை சமுத்திரம் ஊராட்சி ஆகிய ஊராட்சிகளைச் சேர்ந்த பொதுமக்கள் மற்றும் ஊராட்சி மன்றத் தலைவர்கள் முதலமைச்சருடன் நேரடியாகக் கலந்துரையாடினர்.

கிராம சபைக் கூட்டத்தில், மக்களின் மூன்று முக்கிய அத்தியாவசியத் தேவைகளைத் தேர்வு செய்து ஒப்புதல் பெறுதல், மேலும் இழிவான பொருள் தரும் சாதிப்பெயர்கள் கொண்ட குடியிருப்புகள். தெருக்கள், சாலைகள், நீர்நிலைகள் மற்றும் பிற பொது இடங்களில் உள்ள பெயர்களை நீக்கி, புதிய பொருத்தமான பெயர்களை வழங்குவது என தீர்மானம் எடுக்கப்பட்டது.

அத்துடன், 'தாயுமானவர் திட்டம்' கீழ் பயனாளிகளை அடையாளம் கண்டு நலிவு நிலை குறைப்புத் திட்டம் தயாரித்து ஒப்புதல் உள்ளிட்ட மொத்தம் 16 முக்கியத் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

மேலும், கிராம சபையில் ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொது நிதிச் செலவினம் குறித்த விவாதம் நடைபெற்றது.

2024-25 ஆம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை ஒப்புதல் பெறுதல், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் சார்ந்த வரவு மற்றும் பணி முன்னேற்றம், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டப் பணிகளின் முன்னேற்றம், தூய்மை பாரத் இயக்கம் திட்டத்தின் நிலை, ஊரகப் பகுதிகளில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்துதல், டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள். வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு நடவடிக்கைகள் போன்றவை பற்றியும் விவாதிக்கபட்டது.

அதேபோல், தீன்தயாள் உபாத்யாய கிராமப்புற திறன் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், கிராமப்புற இளைஞர்களுக்கான திறன் பயிற்சிகள், தேர்ந்தெடுக்கப்பட்ட 7,515 ஊராட்சிகளில் நடைபெறும் கிராம சபைக் கூட்டங்களின் வீடியோ / ஆடியோ பதிவுகளை சபாசார் இணைய தளத்தில் பதிவேற்றம் செய்தல், பிரதம மந்திரி கிராம முன்னோடித் திட்டத்தின் கீழ் கிராம வளர்ச்சித் திட்டம் தயார் செய்து அதற்கான கிராம சபையின் ஒப்புதல் பெறுதல் உள்ளிட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

தமிழகம் முழுவதும் நடைபெற்ற இக்கூட்டங்களில் பொதுமக்கள் திரளாகப் பங்கேற்றனர்.

### திராவிட இயக்கக் கொள்கைச் சிங்கம்

# முரசொலி செல்வம் முதலாமாண்டு நினைவு நாள்!

## பெங்களூருவில் திருவுருவப் படத்திற்கு – முதல்வர் மு.க.ஸ்டாலின் மலரஞ்சலி !

## சென்னை – 'முரசொலி' வளாகத்தில் உள்ள திருவுருவச்சிலைக்கு

## துரைமுருகன் – டி.ஆர்.பாலு – உதயநிதி ஸ்டாலின் மரியாதை!

**சென்னை, அக்.12-**

**திராவிட இயக்கக் கொள்கைச் சிங்கம் முரசொலி செல்வம் அவர்களின் முதலாமாண்டு நினைவு நாள்!**

**இந்நாளையொட்டி கழகத் தலைவர் - முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் பெங்களூரு சென்றார். பெங்களூருவில் உள்ள முரசொலி செல்வம் அவர்களின் இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தினார்.**

**சென்னையில் - 'முரசொலி' வளாகத்தில் உள்ள முரசொலி செல்வம் அவர்களின் திருவுருவச் சிலைக்கு, கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி., தயாநிதி மாறன் எம்.பி., அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் மாவட்டச் செயலாளர்கள், கழக முன்னணியினர், ஆயிரத்துக்கும் மேற்பட்ட கழகத் தோழர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.**

பேரறிஞர் அண்ணாவின் அன்பில் திளைத்தவர், முத்தமிழறிஞர் கலைஞரின் நெஞ்சில் நீங்கா இடம் பிடித்தவர், முதல்வர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு உற்ற துணையாக பக்க பலமாக இருந்தவர். எல்லாவற்றிற்கும் மேலாக கழகத்தின் கேடயமாகத் திகழ்ந்தவர் மறைந்த முரசொலி செல்வம் அவர்கள்.

கடந்த ஆண்டு இதே நாளில் திடீரென இவ்வுலகை விட்டு அவர் நீங்கியபோது, கதறியழாத கழக உள்ளங்களே இல்லை. அவர் பயன்படுத்திய பேனா மட்டுமல்ல; அவரது எழுத்துகளைச் சுவாசித்த அத்துணை நல் உள்ளங்களும் சொல்லொணா துயரில் ஆழ்ந்தன எனில் அது மிகையல்ல.

### 'முரசொலி'யின் 35 ஆண்டுகால ஆசிரியர்!

முத்தமிழறிஞர் கலைஞரின் மூத்த பிள்ளையான 'முரசொலி'யின் பணிகளைத் தன் தோளில் சுமந்து கொண்டு இளமைப் பருவம் முதலே திறம்படச் செயலாற்றியவர்.

தலைசிறந்த எழுத்தாளர் - பத்திரிகையாளர் - நூலாசிரியரான இவர்,

தொடர்ச்சி 3ஆம் பக்கம்



திராவிட இயக்கக் கொள்கைச் சிங்கம் முரசொலி செல்வம் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாளான நேற்று முன்தினம் (10.10.2025) சென்னை - 'முரசொலி' வளாகத்தில் உள்ள திருவுருவச் சிலைக்கு முன்பு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த முரசொலி செல்வம் அவர்களின் திருவுருவப்படத்திற்கு, கழகப் பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். கழக முன்னணியினர் பலரும் உடன் உள்ளார்கள்.